DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 933 of 2025 |
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | ஆறுமுகம் |
| Father's Name | : | தங்கவேல் |
| Village | : | தொன்னையன் கொட்டாய் |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கிரானைட் |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 06th day of April 2026.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது தொன்னையன் கொட்டாய் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கிரானைட் கம்பெனியில் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்தேன். கடந்த 22.02.2016 ஆம் தேதி நானும், ரவி என்பவரும் சொந்த வேலையாக பர்கூரில் இருந்து கிருஷ்ணகிரி வந்து கொண்டிருந்த போது, தேவராஜ் திருமண மண்டபம் அருகில் போலீசார் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பெண்மணிக்கு விபத்து ஏற்பட்டது சம்பந்தமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தனர். மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும், ரவி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் 22 ஆம் தேதி காலை 06.00 – 07.00 மணியளவில் கையெழுத்து போட்டேன். நானும், ரவி என்பவரும் பர்கூரில் இருந்து ஒன்றாக வந்தோம் என்றால் சரிதான். தேவராஜ் திருமண மண்டபத்திற்கு எதிரே மேம்பாலத்திற்கு அருகில் உள்ள சர்வீஸ் சாலையில் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். விபத்து நடந்த இடம் எந்த இடம் என்று குறிப்பிட்டு காட்டி சொன்னார்கள் என்றால் தேவராஜ் மண்டபத்திற்கு எதிரே சொன்னார்கள். இந்த இடம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வீஸ் சாலையில் விபத்து ஏற்பட்டதாகவோ, அல்லது மேம்பாலத்தில் விபத்து ஏற்பட்டதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு காவல் நிலையம் அடிக்கடி சென்று வரும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. போலீசார் கேட்டதற்காக கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. அன்று எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். தற்போது அது ஞாபகம் இல்லை. நான் கையெழுத்து போடும் போது எத்தனை போலீசார் இருந்தனர் என்றால் தெரியவில்லை. என்னிடம் கையெழுத்து பெற்ற அதிகாரி யார் என்றாலும் தெரியவில்லை. சம்பவம் எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றாலும், நான் சம்பவ இடத்தில் கையொப்பம் இடவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்காக கையொப்பம் போட்டுவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.